**MCOP NO. 40 /2019**

**Date 18.03.2026**

**Rw3 அருண்**

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தற்போது கிளை மேலாளராக 2ம் எதிர் மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் பணியாற்றி வருகிறேன். நான் தாக்கல்செய்துள்ள நிரூபண உறுதி கூற்றில் உள்ள விவரங்கள் யாரால் கூறப்பட்டுள்ளது என்றால் 2ம் எதிர் மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் 3rd party claim Team Department ஆல் தகவல் சேகரிக்கப்பட்டு நிறுவனத்திற்கு சொல்லப்பட்டு அதன் அடிப்படையில் என்னால் விவரம் கூறப்பட்டது. நான் தாக்கல்செய்துள்ள நிரூபண உறுதி கூற்றில் அலுவலக கோப்பின் அடிப்படையில் இந்த வழக்கு சம்மந்தப்பட்ட விவரங்கள் தெரியும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் எந்த அலுவலக கோப்பின் அடிப்படையில் விவரங்கள் தெரிய வந்தது என்றால் 3rd party claim Team Department ல் கொடுக்கப்படும் கோப்பின் அடிப்படையில் தெரியவந்தது. மேற்படி 3rd party claim Team Department கொடுத்த Report ஐ நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் 3rd party claim Team Department கொடுக்கும் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் வழக்கில் எதிர் உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் அதை ஆவணமாக தாக்கல் செய்ய இயலாது. TN 76 U 3238 என்ற விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தைப் பொருத்து policy பற்றிய முழு விவரம் எங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் இந்த வழக்கைப் பொருத்து எதற்காக சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் TN 76 U 3238 என்ற விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தைப் பொருத்து விபத்து சமயத்தில் பாலிசி கிடையாது என்பதைக் குறித்து சாட்சியம் அளிக்க வந்தேன். மேற்படி வாகனத்திற்கு

பாலிசி இல்லை என்பதை எந்த ஆவணத்தின் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் Premium Register ஐ சரிபார்த்து சொல்கிறேன். சங்கரன்கோவில் எல்லைக்குள் விபத்து நடந்தால் சங்கரன்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் விபத்துக்குள்ளான வாகனத்தை ஆய்வு செய்வார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆய்வின் போது விபத்து ஏற்படுத்திய வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வு செய்து மேற்படி இருசக்கர வாகனத்தின் உரிமையாளரிடமிருந்து பாலிசி, ஓட்டுநர் உரிமம், மற்றும் RC Book ஆகியவற்றை பெற்று பதிவு செய்யப்படும் என்றால் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையில் மேற்படி விவரங்கள் பதிவு செய்யப்படும் ஆனால் ஆவணங்களை சேகரித்து சரிபார்த்து போடுவார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது. எ.ம.சா.ஆ.8 ஆவணம் வட்டார போக்குவரத்து அலுவலர் சங்கரன்கோவில் அவர்களால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.8 ஆவணத்தில் TN 76 U 3238 என்ற இருசக்கர வாகனத்திற்கு 12.09.2011 முதல் 11.09.2012 வரை 2ம் எதிர் மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் பாலிசி இருந்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மேற்படி விவரம் தவறானது. எங்கள் அலுவலகத்தில் மேற்படி இருசக்கர வாகனத்திற்கு விபத்து சமயத்தில் பாலிசி கிடையாது. எ.ம.சா.ஆ.9 ஆவணத்தில் TN 76 U 3238 என்ற இருசக்கர வாகனத்திற்கு எங்கள் நிறுவனத்தில் பாலிசி உள்ளது என்பதாக சங்கரன்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலரால் சான்று வழங்கப்பட்டதாக உள்ளது என்றால் மேற்படி விவரம் தவறானது. எங்கள் அலுவலகத்தில் மேற்படி இருசக்கர வாகனத்திற்கு விபத்து சமயத்தில் பாலிசி கிடையாது. எ.ம.சா.ஆ.9 ஆவணத்தில் TN 76 U 3238 என்ற இருசக்கர வாகனத்திற்கு பாலிசி 12.09.2014 முதல் 11.09.2015 வரை பாலிசி உள்ளதா சொல்லப்பட்டுள்ளது என்றால் மேற்படி விவரம்

தவறானது. எங்கள் அலுவலகத்தில் மேற்படி இருசக்கர வாகனத்திற்கு விபத்து சமயத்தில் பாலிசி கிடையாது. TN 76 U 3238 என்ற இருசக்கர வாகனத்திற்கு விபத்து சமயத்தில் எங்கள் நிறுவனத்தல் பாலிசி உண்டு ஆனால் அதை நாங்கள் மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ.10 ஆவணமானது MCOP 86/2017 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் நகலை தான் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி எ.ம.சா.ஆ.10 மற்றும் எ.ம.சா.ஆ.11 ஆவணங்களான MCOP 86/2017 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை இந்த வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ.12 ஆவணம் இந்த வழக்கில் சம்மந்தம்இல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. நான் உண்மை சங்கதிகளை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் விபத்து ஏற்படுத்திய வாகனம் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரியல்ல.

Sd/-P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.